B

8052

Register Number | | | | | |

**Part III**

# விலங்கியல் / ZOOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.

iii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக. 30 × 1 = 30

1. மார்பறையின் அடிபுறம் உள்ள தசைச்சுவர்

அ) பெரிடோனியல் சவ்வு ஆ) உள் விலா எலும்பிடைத் தசைகள்

இ) உதரவிதானம் ஈ) வெளி விலா எலும்பிடைத் தசைகள்.

2. பர்கன்ஜி அமைப்பின் வேலை

அ) வெண்டிரிகிள் சுவருக்கு வலிமையைக் கொடுக்கிறது

ஆ) வெண்டிரிகிள் சுவருக்கு நீள்தன்மையைக் கொடுக்கிறது

இ) வெண்டிரிகிள் தூண்டல்களைக் கடத்துகிறது

ஈ) வெண்டிரிகிள் சுருக்கத்திற்கு பின்பு வெண்டிரிகிளை விரிவடையச் செய்கிறது.

3. பெண்களின் முன்மூளையின் எடை

அ) 900–1000 கி ஆ) 1200 கி

இ) 1100 கி ஈ) 1400 கி.

4. இனப்பெருக்க ஹார்மோன்

அ) TSH ஆ) GH

இ) FSH ஈ) ACTH.

[ Turn over

5. யூரியா தயாரிப்பு நடைபெறும் முக்கிய உடலுறுப்பு யாது ?

அ) கணையம்
ஆ) இரைப்பை
இ) சிறுநீரகம்
ஈ) கல்லீரல்.

6. சூப்பர் பக் ( Super bug ) என்னும் பாக்டீரியாவின் பயன் என்ன ?

அ) எண்ணெய் கழிவுகளை சுத்தம் செய்தல்
ஆ) கேரியோடைப் அமைப்பை புரிந்து கொள்ள உதவுகிறது
இ) வைரஸ்களை கொல்ல உதவுகிறது
ஈ) மற்ற பாக்டீரியாக்களை கொல்ல உதவுகிறது.

7. முழு குரோமோசோம்களை மாற்றுவதற்கு ஏற்ற நிலை

அ) அனா நிலை ( Anaphase )
ஆ) டீலோ நிலை ( Telophase )
இ) புரோ நிலை ( Prophase )
ஈ) மெட்டா நிலை ( Metaphase ).

8. DNA நூலகம் என்பது ..................ன் தொகுப்பு ஆகும்.

அ) குரோமோசோம்களின் துண்டுகள்
ஆ) DNA துண்டுகள்
இ) RNA துண்டுகள்
ஈ) முழு DNA.

9. மிக அதிகமுள்ள பசுமைஇல்ல ( Greenhouse ) வாயு எது ?

அ) $N_2O$
ஆ) $CO_2$
இ) $O_3$
ஈ) $SO_2$.

10. சிந்தி இன பசுக்களின் பூர்வீகம்

அ) பரோடா
ஆ) கராச்சி மற்றும் ஹைதராபாத்
இ) ஹரியானா மற்றும் ஒங்கோல்
ஈ) மகாராஷ்டிரா.

11. லாமார்க் வெளியிட்ட கோட்பாடு

அ) பெற்ற பண்பு மரபுப் பண்பாதல்
ஆ) அங்ககப் பரிணாமம்
இ) உயிரின்மைத் தோன்றல்
ஈ) பரந்துலகில் வாழ்தல்.

12. கதிர் அரிவாள் வடிவச் சிவப்பணுச் செல் இரத்தச்சோகை காணப்படும் மக்கள்

அ) ஆப்பிரிக்க கறுப்பர்

ஆ) அமெரிக்க கறுப்பர்

இ) ஐரோப்பிய வெள்ளையர்

ஈ) ஆசிய மக்கள்.

13. கார்ப்புகள் ( கெண்டை மீன்கள் ) பொதுவாக வளர்க்கப்படும் முறை

அ) பல இன மீன்வளர்ப்பு

ஆ) ஓடும் நீர் மீன்வளர்ப்பு

இ) கழிவு நீர் மீன்வளர்ப்பு

ஈ) ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு.

14. கொடுவா மீனின் விலங்கியல் பெயர்

அ) *ஆஸ்டிரியே எடுலிஸ்*

ஆ) *சில்லா செரெட்டா*

இ) *லேட்டஸ் கால்காரிஃபர்*

ஈ) *பெனியஸ் இன்டிகஸ்.*

15. கப்பி எனப்படும் அலங்கார மீனின் தாயகம்

அ) ஆப்பிரிக்கா

ஆ) தாய்லாந்து

இ) மத்திய அமெரிக்கா

ஈ) ஜப்பான்.

16. குளுக்கோஸ் ஆக்ஸிகரணத்தினால் வெளிப்படும் ஆற்றல் எந்த மூலக்கூறுகளாக சேமிக்கப்படுகிறது ?

அ) அடினோசைன் மானோபாஸ்பேட் மூலக்கூறுகள் ( AMP )

ஆ) அடினோசைன் டைபாஸ்பேட் மூலக்கூறுகள் ( ADP )

இ) அடினோசைன் டிரைபாஸ்பேட் மூலக்கூறுகள் ( ATP )

ஈ) பாஸ்பேட் மூலக்கூறுகள்.

17. எதன் குறைபாட்டினால் மராஸ்மஸ் என்னும் நோய் தோன்றுகிறது ?

அ) கார்போஹைட்ரேட்டுகள்

ஆ) கொழுப்புகள்

இ) வைட்டமின் D

ஈ) புரதங்கள்.

18. செரித்தல் செயல் எதன் உதவியுடன் நடைபெறுகிறது ?

அ) ஹார்மோன்கள் ஆ) என்ஸைம்கள்

இ) கிரியா ஊக்கிகள் ஈ) வைட்டமின்கள்.

19. எலும்பு முறிவு ஏற்பட்ட இடத்தில் ஏற்படும் இரத்தக்கட்டு

அ) தமனி த்ரோம்போசிஸ் ஆ) எலும்பு செல்களின் இறப்பு

இ) ஹீமடோமா ஈ) காலஸ்.

20. இறப்பைத் தொடர்ந்து சில மணி நேரத்தில் தசைகள் இறுக்கமடைதல்

அ) தசைப்பிடிப்பு ஆ) தசை சோர்வு

இ) ரிகர் மார்டிஸ் ( Rigor mortis ) ஈ) தசை கிழிதல்.

21. மனிதரில் கருவுறுதல் நடைபெறும் இடம்

அ) ஃபலோபியன் குழல் ஆ) கருப்பை

இ) கலவிப் பாதை ஈ) செர்விஸ்.

22. ரேபிஸ் வைரஸ் எவ்வகையைச் சார்ந்தது ?

அ) ஆங்கோஜீனிக் வைரஸ் ஆ) ராப்டோ வைரஸ்

இ) ரெட்ரோ வைரஸ் ஈ) வேரியோலா வைரஸ்.

23. விழுங்குதல் முறையில் கிடைக்கும் நோய்த்தடை செய்யும் பொருள்

அ) எரித்ரோசைட்டுகள் ஆ) திராம்போசைட்டுகள்

இ) லியூகோசைட்டுகள் ஈ) ஆன்டிபாடிகள்.

24. தைமஸ் மிகவும் சிறப்பாக செயல்படும் காலம்

அ) வாழ்வின் பின்காலத்தில் ஆ) வாழ்வின் மத்திய காலத்தில்

இ) உறங்கும் காலத்தில் ஈ) வாழ்வின் முன்காலத்தில்.

25. இம்யூனோகுளோபின் மூலக்கூறுகள் எதனால் ஆக்கப்பட்டவை ?

அ) லிப்போபுரதம்

ஆ) பாஸ்போபுரதம்

இ) கிளைக்கோபுரதம்

ஈ) சாதாரண புரதம்.

26. மாடுகளைத் தாக்கும் வைரஸ் நோய்

அ) மாஸ்டிட்டிஸ்

ஆ) காசநோய்

இ) ஹீமரேஜிக் செப்டிசிமியா

ஈ) பாதம் மற்றும் வாய் நோய்.

27. மீனிற்கு உணவாகப் பயன்படும் உயிரிகள்

அ) விலங்கு மிதவைகள்

ஆ) தாவரங்கள்

இ) புழுக்கள்

ஈ) பாக்டீரியாக்கள்.

28. சிறுநீரக சர்க்கரையை அறிந்து கொள்ள சிறந்த முறை

அ) ஹீமோசைட்டோமீட்டர் முறை

ஆ) குரோமட்டோகிராஃபி

இ) மானோமீட்டர் முறை

ஈ) எலெக்ட்ரானிக் சிறுநீர் சோதனை முறை.

29. தேனீ விஷம் எந்நோயை சரிசெய்ய மருந்தாக பயன்படுகிறது ?

அ) காய்ச்சல்

ஆ) குடற்புண்

இ) ருமேட்டிசம்

ஈ) புற்றுநோய்.

30. இதயத்தின் பேஸ்மேக்கர் ( Pacemaker )

அ) சைனுஏட்ரியல் முடிச்சு

ஆ) கார்டியாக் தசைகள்

இ) AV முடிச்சு

ஈ) மையோகார்டியம்.

## பகுதி - II

குறிப்பு : i) ஏதேனும் பதினைந்து வினாக்கட்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள். $15 \times 3 = 45$

31. அவசியமான அமினோ அமிலங்கள் என்றால் என்ன ?

32. பித்த கற்கள் எவ்வாறு தோன்றுகின்றன ?

33. பிசியோதெரபி ( Physiotherapy ) - வரையறு.

34. தீவிர மார்புச்சளி நோயின் அறிகுறிகள் யாவை ?

35. ஹார்மோன்கள் வரையறு.

36. இருவகை கண்புரைகளை பெயரிடு.

37. சிறுநீரகக் கற்கள் எவ்வாறு உருவாகின்றன ?

38. நுண்ணுயிரெதிரி - விளக்கம் தரவும்.

39. கிராஃப்ட் மறுப்பு - விளக்குக.

40. குரோமோசோம் தொகுப்பு தயாரிப்பு முறையின் இரு பயன்கள் யாவை ?

41. அல்பினிசம் ( Albinism ) தோன்றக் காரணம் யாது ?

42. மேகங்களில் விதைத்தல் என்றால் என்ன ?

43. பால் காய்ச்சல் ( Milk fever ) என்றால் என்ன ?

44. ஸ்பிக்மோமானோ மீட்டரின் இரு வகைகள் யாவை ?

45. தேனீ வளர்ப்பு என்றால் என்ன ?

46. CT ஸ்கேன் என்றால் என்ன ?

47. பட்டுப்பூச்சிகளின் எதிரிகள் யாவை ?

48. குரோமோசோம்களின் பிறழ்ச்சி என்றால் என்ன ?

49. நீர் உயிரி வளர்ப்பு - வரையறு.

50. ஹப்பா என்றால் என்ன ?

## பகுதி - III

குறிப்பு : i) ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளி. **56** - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஐந்து மதிப்பெண்கள். **7 × 5 = 35**

51. புரதங்களை பற்றி குறிப்பு தருக.

52. நியூரோஹைபோஃபைசிஸின் நாளமில் சுரப்பு ( Endocrine ) வேலைகளை விவரி.

53. வைரஸ் அமைப்பினை பற்றி சிறுகுறிப்பு வரைக.

54. அமீபியாசிஸ் என்றால் என்ன ?

55. மாற்றுறுப்பு ( Transplantation ) எனப்படுவது யாது ?

56. காற்று விசைச் சக்தி பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

57. மழை நீர் சேகரிப்பு பற்றி சிறுகுறிப்பு வரைக.

58. இழுவைக்காகப் பயன்படும் மாடுகள் ( Draught breeds ) பற்றி விளக்குக.

59. ஸ்டெதஸ்கோப்பின் அமைப்பை படத்துடன் விவரி.

60. தற்கால ( Modern ) இயற்கைத் தேர்வு கோட்பாட்டினை விவரிக்கவும்.

61. கடற்பாசி வளர்ப்பு முறையை விளக்குக.

62. நீர் உயிரி வளர்ப்பின் நோக்கங்கள் யாவை ?

## பகுதி - IV

குறிப்பு : i) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் பத்து மதிப்பெண்கள். $4 \times 10 = 40$

63. சிறுகுடலில் செரித்தலின் செயல்களை விளக்குக.

64. இரத்தத்தின் இயைபை விளக்குக.

65. காது செயல்படும் முறையினை உரிய படத்துடன் விவரி.

66. இம்யூனோகுளோபுலின்கள் ( Immunoglobulins ) மூலம் எவ்வாறு பெற்றுக்கொண்ட நோய்த்தடை காப்பு கிடைக்கிறது என்பதை விளக்குக.

67. ஏதேனும் நான்கு மரபியல் நோய்களை விளக்குக.

68. பசுமைஇல்ல ( Greenhouse ) விளைவிற்கான வாயுக்கள் பற்றியும், சுற்றுச்சூழலில் அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் ஒரு கட்டுரை எழுதவும்.

69. பறவைகளை வளர்த்தலின் உள்ள பல்வேறு நிலைகளை விளக்குக.

70. நன்னீர் உயிரி வளர்ப்பு என்றால் என்ன ? அதன் வகைகளை வகைப்படுத்தி விளக்குக.